தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண் 100, அண்ணாசாலை, கிண்டி, சென்னை 600 032
தொலைபேசி 044-22201337
மின்னஞ்சல் முகவரி ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in
முன்னிலை: திரு மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணை எண் 171/மா/2026
நாள் 30.09.2026

T.R. ஸ்ரீநிவாசன்,
சென்னை–600 091. --- முறையீட்டு மனுதாரர்

மண்டல அலுவலர், மண்டலம் 14,
பெரு நகர சென்னை மாநகராட்சி. --- எதிர் மனுதாரர்

சென்னை–600 091, புழுதிவாக்கம், பாலாஜி நகர், 23வது தெரு, மனை எண் 86, கதவு எண் 3/2 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. T.R. ஸ்ரீநிவாசன் என்பவரின் 10.06.2026 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 11.06.2026 அன்று பெறப்பட்டு 171/மா/2026 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

ஆணை

சென்னை–600 091, புழுதிவாக்கம், பாலாஜி நகர், 23வது தெரு, மனை எண் 86, கதவு எண் 3/2 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. T.R. ஸ்ரீநிவாசன் என்பவர் 10.06.2026 நாளிட்ட தனது மனுவில் பின்வரும் புகார்களை தெரிவித்துள்ளார்:–

"(1.) பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 14, வார்டு 186, புழுதிவாக்கம், பாலாஜி நகர் 22, 17, 24 தெருக்கள் மற்றும் 23வது தெருவில் (ஒரு பகுதி) ஒவ்வொரு பருவ மழைக்காலங்களிலும் தண்ணீர் தேங்கி நிற்பதால், சாலையினை "INSTRUMENT LEVELLING" செய்து பள்ளமாக உள்ள பகுதிகளில் 40 mm ஜல்லி போட்டு, சமன் செய்து மழைத்தண்ணீர் தேங்காத வகையில் புதிய சாலை அமைத்து தருமாறு மாண்புமிகு முதலமைச்சர், அரசு செயலர் உள்ளாட்சித் துறை, ஆணையர் பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி தலைமையிட சாலைகள் துறை கண்காணிப்பு செயலாளர், மண்டலம் 14–ன் மண்டல அலுவலர், மண்டலம் 14–ன், செயற்பொறியாளர்–II, வார்டு 186 இளநிலைப் பொறியாளர் ஆகியோரிடம் 13.12.2025ல் மனு வழங்கப்பட்டது.

(2.) மாண்புமிகு முதலமைச்சர் தனிப்பிரிவிற்கு உதவி செயற்பொறியாளர் மண்டலம்–14, ந.க. எண் அ6/594/2026/ 31.01.2026ல் மனுதாரரின் மனுவின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கையின் விபரத்தினை தெரிவித்து, அதன் விபரத்தினை மனுதாரருக்கும் வழங்கி உள்ளார்.

அதில் தாங்கள் மனுவில் குறிப்பிட்டுள்ள கோட்டம் 186ல் உள்ள பாலாஜி நகர் தெருக்களுக்கு புதிய சாலை அமைக்க மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. நிர்வாக அனுமதி பெற்று விரைவில் புதிய சாலை அமைக்கப்படும் என தெரிவித்துள்ளனர். ஆனால் புதிய சாலை அமைத்திடும் பொருட்டு எவ்வித பணிகளையும் மாநகராட்சி அதிகாரிகள் மேற்கொள்ளவில்லை.

(3.) பெருமதிப்பிற்குரிய தமிழ்நாடு உள்ளாட்சி முறை மன்ற நடுவம் அவர்கள் எனது இந்த மனுவினை கருணையுடன் பரிசீலனை செய்து விசாரணைக்கு ஏற்று, விசாரணை தேதி வழங்கி, விசாரணை செய்து, மேற்கண்ட பாலாஜி நகர் தெருக்களில் சாலை பணிகளை செய்து முடிக்க எதிர்தரப்பினரான மாநகராட்சி அதிகாரிகளுக்கு உரிய ஆணை பிறப்பித்து உத்தரவு வழங்கிடுமாறும் பணிவுடன் வேண்டுகிறேன்.''

2. மனுதாரர் மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 06.08.2026 அன்று நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகுமாறு 21.07.2026 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

3. இந்நிலையில், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்–14ன் உதவி ஆணையர் (முதுநிலை) மற்றும் செயற்பொறியாளர் ஆகியோரின் 03.08.2026 நாளிட்ட அறிக்கையில் பின்வருமாறு தெரிவித்துள்ளார்:–

"மனுதாரர் குறிப்பிட்டுள்ள புழுதிவாக்கம், வார்டு–186, பாலாஜி நகர் 17, 22, 23 மற்றும் 24வது தெருக்களில் மழைநீர் தேங்காவண்ணம் மறு சீரமைப்பு பணிகள் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வேண்டி பெருநகர சென்னை மாநகராட்சி தலைமையகத்தில் உள்ள பேருந்து சாலைகள் துறைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. உரிய நிதி ஒதுக்கீடு பெறப்பட்டவுடன் புதிய சாலை அமைக்கப்படும் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

எனவே, மாண்புமிகு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் மேற்கண்ட விளக்கத்தினை ஏற்று இம்மனுவினை இரத்து செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.''

4. மனுதாரர் 06.08.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

"(1) பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 14, வார்டு 186, புழுதிவாக்கம், பாலாஜி நகர், 17, 22, 24 தெருக்கள் மற்றும் 23வது தெருவில் (ஒரு பகுதி) ஒவ்வொரு பருவ மழைக்காலங்களிலும் தண்ணீர் தேங்கியிருப்பதால், சாலையினை Instrument Levelling செய்து பள்ளமாக உள்ள பகுதிகளில் 40mm ஜல்லி போட்டு, சமன் செய்து மழைத்தண்ணீர் தேங்காத வகையில் புதிய சாலை அமைத்து தருமாறு மனு அளிக்கப்பட்டதில் மனுவில் குறிப்பிட்டுள்ள கோட்டம் 186ல் உள்ள பாலாஜி நகர் தெருக்களுக்கு புதிய சாலை அமைக்க மதிப்பீடு தயாரிக்கப்பட்டு நிர்வாக அனுமதி பெற்று விரைவில் புதிய சாலை அமைக்கப்படும் என தெரிவித்து 31.01.2026ல் பதில் வழங்கினார்கள். ஆனால் இது வரை நிர்வாக அனுமதி பெறாமல், புதிய சாலை அமைக்காமல் காலம் கடத்தி வருகின்றனர்.

(2) மேலும் பாலாஜி நகர் பள்ளி அருகில் அமைந்துள்ள பகுதியின் சுற்று தெருக்களில் வேகதடை அமைக்க கோரி ஒரு வருடமாக தெரிவித்தும் இதுவரை அமைக்கவில்லை. வேகதடை இல்லாததால் விபத்து ஏற்படுகிறது. பள்ளிக் குழந்தைகள் மற்றும் முதியோர்

ஆகியோர் பாதிக்கப்படுகின்றனர். இதற்கு மண்டல அலுவலகத்தில் தார் விலை அதிகமானதால் ஒப்பந்ததாரரால் அமைக்க இயலவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது. ஆனால் ஒரு தெரு புதிதாக அமைக்கும் போது அங்குள்ள வேகதடையும் சேர்த்து அமைக்கப்பட வேண்டும். மண்டல அளவில் இருக்கும் நிதியினை மாற்றி இப்பணியினை முடித்திருக்கலாம். நிதி ஒதுக்கீடு என்பது பெரிய அளவில் நடைபெறும் பணிகளுக்கு மட்டுமே நிர்வாக அனுமதி பெறப்பட்டு முன்னுரிமை அடிப்படையில் மண்டல அளவில் பணிகள் மேற்கொள்ளப்படும். ஆனால் மேற்கண்ட பணிகளுக்கு மண்டல அளவில் உள்ள நிதியினை மாற்றி மண்டல அலுவலர் அவர்களே பணியினை முடித்திருக்கலாம் . ஆனால் ஒரு வருட காலமாக வேகதடை அமைக்கும் பணியினை முடிக்காமல் காலம் தாழ்த்தி உள்ளனர்.

(3) எனவே, பாலாஜி நகர் தெருக்களில் சாலை பணிகளையும் பள்ளிக்கு அருகே வேகதடையும் விரைந்து முடிக்க பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 14ன் அதிகாரிகளுக்கு உரிய ஆணையினை பிறப்பிக்க இம்முறை மன்ற நடுவர் அவர்களை பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.''

5. எதிர் மனுதாரர் தரப்பில் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 14–ன் உதவி பொறியாளர் மற்றும் தொழில் நுட்ப உதவியாளர் ஆகியோர் 06.08.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தங்களது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளனர்:–

''மனுதாரர் குறிப்பிட்டுள்ள புழுதிவாக்கம், வார்டு 186, பாலாஜி நகர் 17, 22, 23 மற்றும் 24வது தெருக்களில் மழைநீர் தேங்காவண்ணம் மறு சீரமைப்பு பணிகள் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வேண்டி பெருநகர சென்னை மாநகராட்சி தலைமையகத்தில் உள்ள பேரூந்து சாலைகள் துறைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. உரிய நிதி ஒதுக்கீடு பெறப்பட்டவுடன் புதிய சாலைகள் அமைக்கப்படும்.

மேலும் பாலாஜி நகரில் அமைந்துள்ள பள்ளியின் அருகில் உள்ள சுற்றுத் தெருக்களில் வேகதடை அமைப்பது தொடர்பாக ஏற்கனவே வார்டு 186ல் பணியினை மேற்கொண்ட ஒப்பந்ததாரர் தனது பணி முடிவடைந்து வேறு கோட்டத்திற்கு சென்றுவிட்ட நிலையில் அந்த ஒப்பந்ததாரரிடம் வேகதடை அமைக்குமாறு கோரப்பட்டுள்ளது.

மண்டலங்களில் நடைபெறும் பணிகளுக்கு பெருநகர சென்னை மாநகராட்சி தலைமையகத்தால் மட்டுமே நிர்வாக அனுமதி அளிக்கப்படும் அந்நிர்வாக அனுமதி அடிப்படையில் மண்டலங்களுக்கு நிதி ஒதுக்கீடு பகிர்ந்து அளிக்கப்படும். மண்டலங்களில் நடைபெறும் பணிகளில் மண்டல அலுவலரால் முன்னுரிமை பட்டியல் தயாரிக்கப்பட்டு அதன் அடிப்படையில் பணிகள் மேற்கொள்ளப்படும் என்ற விவரத்தினை இம்முறைமன்ற நடுவர் அவர்களுக்கு பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

எனவே நிதி ஒதுக்கீடு பெறப்பட்டப்பின் சாலைகள் அமைக்கும் பணி மேற்கொள்ளப்படும் மற்றும் பள்ளிக்கு அருகில் வேகதடை அமைக்கும் பணி முன்னுரிமை அடிப்படையில் அமைத்து தரப்படும் என்ற விவரத்தினை இம்முறை மன்ற நடுவர் அவர்களுக்கு பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

மேலும் பேருந்து வழி, சாலை துறை மூலம் சாலை மறு சீரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்படும் போது மேலே குறிப்பிடப்பட்டுள்ள சாலைகள் முன்னுரிமையாக கொண்டு சாலைகள் மறு சீரமைத்து தரப்படும் எனவும் தெரிவித்துக்கொள்கிறோம்.''

6. மனுதாரரின் மனு, வாக்குமூலம், எதிர்மனுதாரரான பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 14–ன் உதவி ஆணையர் (முதுநிலை) மற்றும் செயற்பொறியாளர் ஆகியோரின் அறிக்கை, உதவி பொறியாளர் மற்றும் தொழில் நுட்ப உதவியாளர் ஆகியோரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:–

பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 14, வார்டு 186 புழுதிவாக்கம், பாலாஜி நகர், 17, 22, 24 தெருக்கள் மற்றும் 23வது தெருவில் (ஒரு பகுதி) ஒவ்வொரு பருவ மழைக்காலங்களிலும் தண்ணீர் தேங்கியிருப்பதால், சாலையினை Instrument Levelling செய்து பள்ளமாக உள்ள பகுதிகளில் 40 mm ஜல்லி போட்டு, சமன் செய்து மழைத்தண்ணீர் தேங்காத வகையில் புதிய சாலை அமைத்து தருமாறு மனு அளிக்கப்பட்டதில் மனுவில் குறிப்பிட்டுள்ள கோட்டம் 186ல் உள்ள பாலாஜி நகர் தெருக்களுக்கு புதிய சாலை அமைக்க மதிப்பீடு தயாரிக்கப்பட்டு நிர்வாக அனுமதி பெற்று விரைவில் புதிய சாலை அமைக்கப்படும் என தெரிவித்தும், இது வரை நிர்வாக அனுமதி பெறவில்லை என்பதும், மேலும் பாலாஜி நகர் பள்ளி அருகில் அமைந்துள்ள பகுதியின் சுற்று தெருக்களில் வேகதடை இல்லாததால் விபத்து ஏற்பட்டு, பள்ளிக் குழந்தைகள் மற்றும் முதியோர் ஆகியோர் பாதிக்கப்படும் அவ்விடத்தில் வேகதடை அமைக்க கோரியும் இதுவரை அமைக்கவில்லை என்பதும், இதற்கு மண்டல அலுவலகத்தில் தார் விலை அதிகமானதால் ஒப்பந்ததாரரால் அமைக்க இயலவில்லை என்று தெரிவிக்கப்பட்டது என்பதும், ஆனால் ஒரு தெரு புதிதாக அமைக்கும் போது அங்கு வேகதடையும் சேர்த்து அமைக்கப்பட வேண்டும் என்பதும், நிதி ஒதுக்கீடு என்பது பெரிய அளவில் நடைபெறும் பணிகளுக்கு மட்டுமே நிர்வாக அனுமதி பெறப்பட்டு முன்னுரிமை அடிப்படையில் மண்டல அளவில் பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதும், ஆனால் மேற்கண்ட பணிகளுக்கு மண்டல அளவில் உள்ள நிதியினை மாற்றி மண்டல அலுவலர் அவர்களே பணியினை முடித்திருக்கலாம் என்பதும், பாலாஜி நகர் தெருக்களில் சாலை பணிகளையும் மற்றும் பள்ளிக்கு அருகே வேகதடையும் விரைந்து முடிக்க பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 14ன் அதிகாரிகளுக்கு உரிய ஆணையினை பிறப்பிக்க கோரியிருப்பது மனுதாரரின் மனு மற்றும் வாக்குமூலம் ஆகியவற்றின் வாயிலாக அறிய முடிகிறது.

மனுதாரர் குறிப்பிட்டுள்ள புழுதிவாக்கம் வார்டு 186 பாலாஜி நகர் 17, 22, 23 மற்றும் 24வது தெருக்களில் மழைநீர் தேங்காவண்ணம் மறு சீரமைப்பு பணிகள் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வேண்டி பெருநகர சென்னை மாநகராட்சி தலைமையகத்தில் உள்ள பேருந்து சாலைகள் துறைக்கு சமர்ப்பிக்கப்பட்டு, அத்துறையால் உரிய நிதி ஒதுக்கீடு பெறப்பட்டவுடன் புதிய சாலைகள் அமைக்கப்படும் என்பதும், மேலும் பாலாஜி நகரில் அமைந்துள்ள பள்ளியின் அருகில் உள்ள சுற்றுத் தெருக்களில் வேகதடை அமைப்பது தொடர்பாக ஏற்கனவே வார்டு 186ல் பணியினை மேற்கொண்ட ஒப்பந்ததாரர் தனது பணி முடிவடைந்து வேறு கோட்டத்திற்கு சென்றுவிட்ட நிலையில் அந்த ஒப்பந்ததாரரிடம் வேகதடை அமைக்குமாறு கோரப்பட்டுள்ளது என்பதும், மண்டலங்களில் நடைபெறும் பணிகளுக்கு பெருநகர சென்னை மாநகராட்சி தலைமையகத்தால் மட்டுமே அளிக்கப்படும் நிர்வாக அனுமதி அடிப்படையில் மண்டலங்களுக்கு நிதி ஒதுக்கீடு பகிர்ந்து அளிக்கப்பட்டு அங்கு நடைபெறும் பணிகளில் மண்டல அலுவலரால் முன்னுரிமை பட்டியல் தயாரிக்கப்பட்டு அதன் அடிப்படையில் பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதும், எனவே நிதி ஒதுக்கீடு பெறப்பட்டப்பின் பேருந்து வழி சாலை துறை மூலம் சாலை மறு சீரமைப்பு பணிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு சாலைகள் மறு சீரமைத்து தரப்படும் என்பதும் மற்றும் பள்ளிக்கு அருகில் வேகதடை அமைக்க ஒப்பந்ததாரரிடம் கோரப்பட்டுள்ளது என்பதும், எதிர்மனுதாரரான பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 14–ன் உதவி

ஆணையர் (முதுநிலை) மற்றும் செயற்பொறியாளர் ஆகியோரின் அறிக்கை, உதவி பொறியாளர் மற்றும் தொழில் நுட்ப உதவியாளர் ஆகியோரின் வாக்குமூலம் ஆகியவற்றின் வாயிலாக அறிய முடிகிறது.

இந்நேர்வில், மனுதாரர் குறிப்பிட்டுள்ள பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 14, வார்டு 186, புழுதிவாக்கம், பாலாஜி நகர், 17, 22, 24 தெருக்கள் மற்றும் 23வது தெருவில் ஒரு பகுதி, ஆகிய இடங்களில் மழைநீர் தேங்காவண்ணம் சாலை மறு சீரமைப்பு பணிகள் மேற்கொள்ள நிதி ஒதுக்கீடு பெறப்பட்டப்பின் சாலைகள் அமைக்கும் பணி மேற்கொள்ளப்படும் என்றும், பாலாஜி நகர் பள்ளி அருகில் அமைந்துள்ள பகுதியின் சுற்று தெருக்களில் வேகதடை அமைக்கும் பணி ஒப்பந்ததாரரிடம் கோரப்பட்டுள்ளது என்றும் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 14–ன் உதவிப்பொறியாளர் மற்றும் தொழில் நுட்ப உதவியாளர் ஆகியோர் தங்களது வாக்குமூலத்தில் தெரிவித்தவாறு, மேற்கண்ட பணிகளை முடிக்க விரைந்து நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 14–ன் மண்டல அலுவலருக்கு உத்திரவிடுமாறு பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்ற நடுவம் பரிந்துரை செய்து ஆணையிடுகிறது.

2026–ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள்30–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒப்பம்)

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

(1) திரு T.R. ஸ்ரீநிவாசன்
மனை என் 86, கதவு எண் 3/2
பாலாஜி நகர், 23வது தெரு
புழுதிவாக்கம், சென்னை–600 0 91.

(2) ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி
ரிப்பன் மாளிகை, சென்னை 600 003

(3) மண்டல அலுவலர், மண்டலம் 14,
பெருநகர சென்னை மாநகராட்சி
எண் 6/64, புழுதிவாக்கம் மெயின் சாலை,
மடிப்பாக்கம், சென்னை 600 091.

(4) கண்காணிப்பாளர்/ ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
மழைநீர் வடிகால் துறை, பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை 600 003

நகல்:

மாண்புமிகு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்.
இ.கோ / உதிரிகள்.

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

30/9/26

செயலாளர்.